ARYA DHARMAM　　　　REGD. No. M. 2913
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்.

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस்து नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் பிரமாதி-ஸ்ரீ தை-மீ 5உ 1940 ஸ்ரீ ஜனவரி-மீ 18உ | லஉ-3

வாரக்குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

வங்க சிங்கம் வருகை!! சுபாஷ் சந்திர போஸ் சென்னைக்கு வந்தபோது வழக்கப்படி காந்தி சீடர்கள் அவரைப் பஹிஷ்காரஞ் செய்தனர், இளைஞர் உற்சாகத்திற்கு அளவில்லை. இளமை பெற்ற ஸ்ரீ எஸ். சீனிவாஸய்யங்காரும் பங்கெடுத்துக்கொண்டனர். வழக்கமான ஜ்வரமும் அவரை விடவில்லை, பல பல ஹீனத்திலும் தைர்ய லக்ஷ்மி அவரை விடவில்லை.

ருஷ்யரிடம்பை பிள்!! கடவுளே நேரில் வந்தாலுங்கூட நீயும் வேண்டாம்! உமது உபதேசமும் வேண்டாமெனும் ருஷ்யரிடம் ஆகாய விமானத்திலிருந்து பைபிள் வர்ஷிக்கப்படுகிறதாம்! வாழ்க்கையில் தர்மத்தைக் கைப்பற்ருதவரை எந்த மதமும் எவருக்கும் பயன்படா. ஆனல் ருஷ்யாவோ, சு. ம, சங்கமோ கடவுள் சக்தியைஉணருங்காலம் வரும்.

அறிவிற்கே ஆபத்து!! கான்பூரில் ஸ்வல்ப மார்க்கு வாங்கிய மாணவர் பரீக்ஷைக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை. இதை ஆக்ஷேபித்து 10 ஆயிரம் மாணவர் வேலை நிறுத்தி ஆர்பாடஞ் செய்தனர். இத்தகைய கார்யம் எங்கு போய் முடியும். தேசமே நாசமாக வழி இது. இதை அடக்க, இதை ஆரம்பித்த மேதாவிகளாலேயே முடியவில்லை. இனியாகிலும் இதை ஆதரிக்காமலிருப்பாரா?

சாஸ்திரிகளும் வருந்துகிருர்!! மலையாளத்தில் சில உபாத்யாயர்கள் தங்கள் குறை அகல வேலை நிறுத்தம் செய்தனா. சீர்திருத்த வாதியான மகா கனம் சாஸ்திரிகள்கூட இந்த முறை உபாத்திமை தொழிலுக்கே மான பங்கத்தை அளிக்குமென்கிருர்.

உலக ஒழுக்கத்திற்கு 3 வழி!! முன் சண்டையில் அமெரிக்க தலைவர் 10 வழி கூறினர். இப்போது ஸ்ரீஎஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் சிறிய நாடுகளை ஒன்ருகப் பிணைத்தல் பெட்ரோலைப் பொதுவாக்குதல். பொது சங்கம். ஆயுதங்களைக் கவனித்தலென உபதேசிக்கிருர். அவரைத் தூக்கிவிட பத்ரிகைகளில்லாததே பெறுங் குறை. எங்கும் பேசுகிருர் பாவம்.

கும்பகோணம் பாங்கி லிமிடெட், கும்பகோணம்.

(1904ல் ஸ்தாபிக்கப்பட்டது)

கிளைகள்: மன்னார்குடி, நாகப்பட்டணம், நன்னிலம், ஐயம்பேட்டை.

31—12—39ல் எடுத்த கோஷ்பாரா

	ரூ.	அ.	ப.		ரூ.	அ.	ப.
மூலதனம் (செலுத்தப்பட்ட பங்குதொகை)	2,82,575	0	0	கடன்களும் உண்டியல்களும்	10,02,249	5	10
காப்புநிதிகள்	2,13,015	3	0	சொத்துக்கள் சாமான்கள் வகையரு	21,389	9	10
தவணை நடப்பு முதலிய டெபாஸிட்டுகள்	10,81,440	14	6	இதர இனங்கள்	14,324	11	0
ஈட்டின்பேரில் வாங்கிய கடன்கள்	இல்லை			சர்க்கார் கடன் பத்திரங்கள் கம்பெனி ஷேர்கள்	3,34,953	10	0
மற்ற இனங்கள்	27,973	11	8	கையிருப்பு, இதர பாங்குகளில் இருப்பு	2,32,087	8	6
ஆக	16,05,004-13—2			ஆக	16,05 004-13—2		

S. மஹாலிங்க அய்யர் பி.ஏ., பி.எல்.,
மானேஜிங் டைரெக்டர்.

கஸ்ஹுவியின் கூற்று!! காங்கிரஸ் தான் இந்திய ப்ரதிநிதி என்று நிரூபிக்க மறு தேர்தல் நடத்திப் பார்ப்போமென்கிருர். ஆனல் தேர்தல் மூலம் முடிவு காட்ட நமது தேசமும் காலமும் எற்றதல்ல. எற்கனவேயுள்ள சிறிது பலத்துடன் பலருள்ளத்தை ஏமாற்றி வாக்குபெற பல மோஹநாஸ்த்ரங்களவர்களிடமுண்டு. நடு நிலை தவருத தேர்தல் உத்யோகஸ்தர் விடு வீடாக சென்று வாக்கு பெறின் அதன் முடிவு சிறிது உண்மையாகும்.

பண்டித மாளவ்யா தலைவர்! திருப்பதியில் நடக்கும் அகில இந்திய கீழ் திசை கல்வி மஹாநாட்டிற்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டது மிகவும் பொருத்தமானதே! ஸபை நன்கு நடைபெறுக!

நல்ல காலமில்லை!! தற்கால அரசாங்க அதிகாரி ஆலயப்பிரவேசத்திற்கு எவ்வளவு எதிர்ப்பிருக்கிறதென்று நன்கு தெரியுமென்று கூறியும் தேசீய ஸபையின் நட்பை நாடி அது செய்த பெருந்தவருன ஆலயப்ரவேச சட்டத்தை அகற்ருதிருத்தலும் அதற்குரிய காரணம் கூறுவதும் விந்தையாயிருக்கிறது. யுத்தம் நின்று உலசாந்தி ஏற்படவேண்டுமானல் அதர்ம கசட்டத்தை அகற்றி மீனுக்ஷிக்கு கும்பாபிஷேகம் நடைபெறவேண்டும்.

கோச்சியின் சிறப்பு!! பட்டத்தால் சிலருக்கும், சிலரால் பட்டத்திற்கும் பெருமை ஏற்படுகிறது. ஷை அரசாங்கம் சென்னை மைலாப்பூர் ஸம்ஸ்கிருத கலாசாலைத்தலைவரான பிரம்மஸ்ரீ ராமசந்த்ரதிக்ஷிதர்வாளுக்கு "பண்டித ராஜ்" எனும் பட்டமளித்தது. சென்னை அரசாங்கம் இனி மௌனமாயிருத்தலாகாது.

பக்ஷிதீர்த்த குருகுலம்! எனது பிரார்த்தனைக்கிணங்கி பிரம்மஸ்ரீ யக்ஞேச்வர சோமயாஜி அவர்கள் மாணவர்களுக்குச் சிரௌதமும் கற்பிக்கிருர். ஓர் பத கக்ஷியும் நடைபெறுகிறது. வேததர்மாபிமானமுள்ள கனவான்கள் ஷை விலாஸத்திற்கு பொருளுதவி புரிவதுடன் வேத புஸ்தகங்களைத்தந்துதவும்படி வேண்டுகிறேன்.

முயற்சி ஸபலமாகுக! புரசை ஸ்ரீமான் நாராயணஸாமி அய்யர் எம். ஏ. அவர்கள் ஸ்ரீ ஷோடசீ காஞ்சி காமாக்ஷி ஏகாம்பரர், ஹயக்ரீவர் அகஸ்த்யர் முதலிய வர்ணப் படங்களுடன் ஸ்ரீ லலிதோபாக்யானத்தைத் தமிழில் வெளியிட முயற்சிக்கிருர். அரிய முறையில் செல்லுமிவர் அம்பிகையின் அருளால் வெற்றிபெறவேண்டுகிருேம்.

ஆசாரம்.

காலை அநுஷ்டானங்கள்

(ஸ்ரீ எஸ் வைதீஸ்வரய்யர் கல்கத்தா)

ஜீவராசிகளில் மஹிமை பொருந்தி விளங்கும் மனிதன் அந்த மஹிமையை பிரயோஜனப்படுத்திக் கொள்வதே ஆசாரமாகும். ஆசாரத்தை நியமிப்பது தர்மம். தர்மத்தை நியமிப்பவர் கடவுள். ஜன்மம் என்பதே ஒரு வியாதி. பசி, தாகம், விஷய போகங்கள், காமக்ரோதாதிகள் அந்த வியாதியின் அறிகுறிகள். வியாதி தீர்ந்தால் ஈச்வரத்தன்மை என்னும் ஐச்வர்யம் ஸித்திக்கிறது. (தனமுள்ளவன் ஸர்வ வல்லமையுள்ளவன் போலிருப்பதால் அவனை ஐச்வர்யவான் என்கிறோம்.) எல்லாரும் தன்னை அடையவேணுமென்ற பொருள் காரணமாய்க்கடவுள் தர்மம் என்னும் மருந்தை விதித்திருக்கிறார். ஒவ்வொரு வைத்யன் ஒவ்வொரு சிகித்ஸையில் அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் தேர்ந்திருப்பது போல நமது முன்னோர்களான ரிஷிகள், ஔவையார், திருவள்ளுவர் முதலானோர் ஜன்ம வியாதி தீரக்கூடிய மார்க்கங்களை ஆசார மூலம் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆசாரத்தில் பொது ஆசாரமென்று வித்யாஸமின்றி எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டியதும் விசேஷ ஆசாரமென்று வகுப்புக்களுக்கு உரியதும் இருக்கின்றன. பொது ஆசாரத்தை முதலில் கவனிப்போம்.

பேச்சு வழக்கத்தில் "ஆசாரமாயிருக்கிறான்" என்று மடி உடுத்திக்கொள்வதற்கு சொல்வதுண்டு. மடி மாத்திரம் ஆசாரமாகாது. தர்ம வழியை ஆசரிப்பது கடைபிடித்து ஒழுகுவதெல்லாம் ஆசாரம். ஒருவன் தூங்கும்பொழுது பிணத்திற்குச் சமமாயிருக்கிறான். சிலர் தூக்கத்திலேயே இறந்து விடுவதையும் கேட்டிருக்கலாம். விழித்துக்கொள்ளும் பொழுது ஞாபகம் வருகிறது. இது ஆத்ம சக்தியை உணர்த்துகிறது. உபநிஷத்துக்களில் இதைக்கொண்டு ஆத்ம நிரூபணம் செய்கிறார்கள். எல்லாம் பரமாத்மாவின் மஹிமையை உணர்த்துகின்றன. கடவுள் அருளாலன்றி ஒருவரும் விழிப்பதில்லை. ஆகையால்விழித்துக்கொண்டதும் கடவுளைத் தொழவேண்டும். அந்த சமயம் இந்திரியங்கள் எல்லாம் முதல் நாள் வேலைகளால் அலுத்து தூக்கத்தில் ஓய்வடைந்திருக்கும். அவைகள் தங்கள் வியாபாரங்களில் திரும்பவும் பிரவேசிக்குமுன் தியானம் செய்வது எளிது. இந்த தியானத்தால் ஆத்மசக்தி அதிகரிக்கும். கடவுளின் சமீபத்திலிருப்பது போலிருந்து ஆனந்தமளிக்கும். இது நாளுக்குநாள் விருத்தியாகி விஷயப்பற்றின் பலம் குறையும்.

இவையெல்லாம் நன்கு ஸித்திக்க வேண்டுமானால் அதிகாலையில் 4 மணிக்குள் எழுந்திருக்க வேண்டும். சூரியோதய நேரமாக ஆக அந்த வெப்பத்தினளவு உடம்பில் தளர்ச்சி ஏற்படுகிறதென்பது எல்லாரும் அறிந்த விஷயம். தளர்ச்சியோடு சோம்பலும் அதிகரிக்கிறது. வியாதிகளும் உண்டாகின்றன. ஆகையால் கிழக்கு வெளுக்குமுன் அவசியம் எழுந்திருக்கவேண்டும். தூக்கத்திற்கு நேரமில்லையென்று பலர் சாக்குச் சொல்வதுண்டு. அவர்கள் முன்னிரவில் 12 மணிவரை விழித்திருப்பவர்கள். தூக்கம் வருவதில்லை என்றும் ஒரு சாக்கு. நானும் பல வருஷங்கள் இந்த தூக்கக்ஷியில் இருந்தவன். சீக்கிரம் படுத்துப் பழகினால் தூக்கம் அவசியம் வரும். மனதிற்கு இது நன்மை என்ற நம்பிக்கையும் உத்ஸாகமும் கொடுத்தால் எதுவும் சாதிக்கலாம். நமது சாஸ்திரத்தை அனுசரிப்பவர் தவிர உலகிலுள்ள கோடீச்வார்கள், பிரபல ஆராய்ச்சியாளர்கள், கார்யவாத நிபுணர்கள், எல்லாரும் அதிகாலையில் எழுந்திருப்பவர்களே. அத்யாவசிய மாதலால் இது விரிந்தது. தியானமோ ஸ்தோத்திரமோ அவரவரால் முடிந்தவரை ஐந்து நிமிஷங்களுக்குக் குறையாதிருக்கவேண்டும்.

எழுந்து காலடி எடுத்துவைப்பதற்கு முன் பூமாதேவியையும் ஸ்மரிக்கவேண்டும் நல்லாரையும் பொல்லாரையும் தன்னை உதைப்பவரையும் வெட்டுபவரையும் பொறுத்து போஷிக்கிறது பூமி. இந்த ஸ்மரணையால் ஒருவனுக்குப் பொறுமையும் அதனால் முயற்சியும் அதிகரிக்கிறது. சிறுமையையும் தோல்வியையும் பாராட்டாது பிறருக்கு நன்மை செய்து தானும் முன்னேற்றமடைகிறான். பிறகு சற்றுநேரம் அன்று செய்யவேண்டிய கார்யங்களைத் தீர்மானிக்கவேண்டும்.

நமது தேகம் மண்ணாலானது. மண்ணின் குணம் கந்தம். அதாவது கந்தமெல்லாம் மண்ணிலேயே கரைந்து அற்றுப்போகிறது ஸோப்பு முதலான திரவியங்கள் வேறு கந்தங்களால் முதல் கந்தத்தை மறைக்கிறதேயன்றி போக்குகிறதில்லை. எழுந்ததும் தேகமெல்லாம் மல ஜலமும் துர்கந்தமும் நிறைந்திருப்பதால் அவைகளைப்போக்கவேண்டிய அளவு நல்ல மண்ணும் ஜலமும் எடுத்து வைத்துக்கொண்டு கழிக்கவேண்டும். மலத்வாரத்தை நெல்லிக்காயளவு மண்ணால் மூன்றுமுறை ஜலமும்விட்டு சுத்தம் செய்யவேண்டும். ஜலத்வாரத்துக்கு ஒரு முறை போதும். பாதங்கள் கைகளுக்கு நான்கு முறை தேவை. பிறகு ஜலத்தால் வாயை எட்டு முறை கொப்பளிக்கவேண்டும். மலஜலத்தை கீழ் நோக்கித்தள்ளுவது அபான வாயு. அது கீழ் நோக்கியதால் ஆத்மசக்தி குறைகிறது. அதை சீர்படுத்துவதே வாய் கொப்பளிப்பதின் முக்ய நோக்கம். மலஜல விஸர்ஜனத்திற்கு இரவில் தெற்கு முகமாயும் பகலிலும் ஸந்தியா காலங்களிலும் வடக்கு முகமாயும் உட்காரவேண்டும். பூமியில் தென் த்ருவத்திற்கும் வடத்ருவத்திற்கும் போகும் காந்த சக்தியை ஒட்டிய நிபந்தனை இது. மேலும் சூரிய வீதியாகிய கிழமேற்கு கெடுதல் விளைவிக்கும். தலை துணியால் மூடியிருக்கவேண்டும். மலஜல விஸர்ஜனந்தவிர மற்ற சமயங்களில் தலை மூடக்கூடாது. மலம் விஸர்ஜன ஸமயம் பொழுது தேகத்திலுள்ள ரக்தம், சூடு, தலைக்கு ஏறுகிறது. அதன் பிறகு சூடெல்லாம் திடீரென்று குறைந்து போகிறதுமுண்டு. ஒவ்வொரு சமயம் வியர்த்துத்தளர்ந்து மூர்ச்சை போலாவதுமுண்டு. தலை திறந்து குளிர்காற்று தாக்கினால் ஜலதோஷமுண்டாகும். அதிலும் வாந்தி எடுக்கும் பொழுது தலையைப் பிடித்துக்கொள்வதால் சிரமம் குறைவது போல தலைக்கட்டு நன்மை போலும். பேசக்கூடாது. அசுத்தத்தைப் பார்க்கக்கூடாது. பார்த்தால் சக்தியும் அதோடு கீழே போகும். ஊருக்குவெளியில், ஒருவரும்போகாத இடத்தில், புல்லைப்பரப்பி, என்பவையுமுண்டு. ஸௌகரியம் இருந்தால் செய்வது நலம். பாதைகளிலும், பயிர்விளையும் நிலங்களிலும் சூரியன், அக்நி, பெரியோர், கோவில் எதிரிலும் ஸமீபத்திலும் அசுத்தம் செய்யக் கூடாது. சுத்திகள் சுகாதாரங்களுக்காக ஏற்பட்டவை. நீர் மாத்திரம் விடுத்தாலும் மண்ணால் சுத்தமும் 4 முறை வாய் கொப்பளிப்பதும் அவசியம்

பல் தேய்த்தல்

பல்தேய்ப்பதற்குக் குச்சி அவசியம். "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" ஆள் காட்டி விரலால் தேய்க்கவே கூடாது. ஊத்தையின் நாற்றம் எல்லாரும் அறிந்ததே. அதுவிரலில் பட்டால் போவது சிரமம். எச்சிலே விஷமென்பதும் நவநாகரீகம் அறியும் தேய்த்த பிறகு 12 முறை வாய்க்கொப்பளிக்க வேண்டும் விஷமும் நாற்றமும் போவதோடு உள்ளேயிருக்கும் நாடிகளும் இந்தப் பயிற்சியால் சுத்தமடைகின்றன. ஜலம் எடுத்து வைத்துக்கொண்டு கிழக்கு முகமாய் உட்கார்ந்து பேசாமல் தேய்க்கவேண்டும். மலஜலம் கழிக்கும் பொழுதும், பல் தேய்க்கும் பொழுதும் பேசுவதால் விஷக்காற்றை உள்கொள்ள வேண்டியிருக்கும், நிற்பதாலும் நடப்பதாலும் தேகம் உடைகளில் பட்டு அசுத்தமாகும். தற்காலம் பல்தேய்க்க புருசு உபயோகப்படுத்துகிறார்கள். அதை எவ்வளவு அலம்பினாலும் ஊத்தையில் சிறிதளவேனும் அதில் தினம் சேர்ந்து கொண்டேயிருக்கும். தேய்த்த குச்சியை அலம்பி எறிந்து விடவேணும். பௌர்ணமியில் சந்திரனுடைய வேகம் சமுத்திரத்தில் தாக்குவதுஎல்லோரும்அறிந்தது. அமாவாஸ்யையில் சந்திரகலை மரஞ்செடிகளில் இருக்கிறது. ஆகையால் அன்று ஒன்றையும் வெட்டக் கூடாது. 12 முறை வாய்க்கொப்பளிப்பதே போதும். தினந்தோறும் குத்திக்கிளறிய பல்லுக்கு விடுமுறை நாளாகவும் எண்ணலாம். (தொடரும்)

சுந்திரவிலாஸ் பிரசுரங்கள்

தேவிபாகவதம் முதல் வால்யம்	5	0	0
தேவிபாகவதம் இரண்டாம் வால்யம்	4	0	0
காமாக்ஷி விலாசம்	0	6	0
பெரியபுராணம்	8	8	0
திருவந்தியார் திருகளிற்றுபாடி	2	0	0
குலச்சிறை நாயனார்	0	2	0
சிவஞானபோத கருத்துரை	0	3	0
திருமுறுகாற்றுபடை	0	2	0
முருகர் ஸ்தோத்ரம்	0	2	0
தனிகாசல அனுபூதி	0	0	6
யுகதர்மம்	0	2	0
மானவா ஸ்தோரம்	0	0	6

ஸ்ரீ N. E. வெங்கடேச சர்மா பிரசுரங்கள்.

ஸம்ஸ்கிருதம் தமிழ் அகராதி	2	0	0
கிரந்த தமிழ் ,,	4	0	0
தமிழ், ஸம்ஸ்கிருதம் ,,	1	0	0
ஸம்ஸ்கிருத ஸ்வபோதினி	1	0	0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந பிர்ண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
கும்பகோணம்

குழந்தைகளுக்கு கட்டி முதலியரோகங்கள் பலவிதசெயற்கை ஆகாரத்தினால்தான்.
சிறு குழந்தைகளுக்கு தாய் பால் தான் இயற்கையான உத்தம உணவு.

पयस्या. PAYASYA [Regd.] பயஸ்யா

தாயின் பாலை மிகுதியாக வளர்க்கிறது.

கிடைக்குமிடம் :—ஆத்ரேய ஆயுர்வேத சாலா. தென்னூர் ரோடு, திருச்சினாப்பள்ளி.

விலை. ¼ பவுண்டு 1—6—0.
½ பவுண்டு 2—8—0.
(Packing & Postage extra.)

உ

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

மூகபஞ்சசதீ.

மந்தஸ்மித சதகம்.

90 ஆகர்ஷந்நயனானி நாகிஸதஸாம் சைத்யேன ஸம்ஸ்தம்பயன் |
இந்தும் கிஞ்ச விமோஹயன் பசுபதிம் விச்வார்த்தி முச்சாடயன் |
ஹிம்ஸன் ஸம்ஸ்ருதிடம்பரம் தவ சிவே! ஹாஸாஹ்வயோ மாந்த்ரிக: |
ஸ்ரீ காமாக்ஷி! மதார்த்திதாபதமஸோ வித்வேஷணே சேஷ்டதாம்॥

சிவே! மங்களமூர்த்தியான ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே நாகிஸதஸாம் - தேவதைகளுடைய, நயநாநி - கண்களை ஆகர்ஷன் - ஆகர்ணம் செய்கிறவனும், சைத்யேன - குளிமையினல், இந்தும் - சந்திரனை, ஸம்ஸ்தம்பயன் - ஸ்தம்பனம் செய்கிறவனும், கிஞ்ச - இன்னும், பசுபதிம் விமோஹயன் - மோஹிக்கச் செய்கிறவனும், விச்வார்த்திம் - உலகத்தின் கஷ்டத்தை, உச்சாடயன் - துரத்தியடிப்பவனும், ஸம்ஸ்ருதிடம்பரம் - ஸம்ஸாரக் கொடுமையை, ஹிம்ஸன் - போக்கடிப்பவனுமான. தவ - உன்னுடைய, ஹாஸாஹ்வய: - புன்சிரிப்பாகிற, மாந்த்ரிக: - மந்திரவாதியானவன் மதார்த்திதாபதமஸ: - என்னுடைய, கஷ்டம், ஸந்தாபம், அக்ஞானம் இவைகளுடைய, வித்வேஷணே - போக்கடிக்கும் கார்யத்தில், சேஷ்டதாம் - பிரயத்னப்படட்டும்.

91 க்ஷோபீய: க்ஷபயந்து கல்மஷபயாநி அஸ்மாக மல்பஸ்மித ஜ்யோதிர்மண்டல சங்க்ரமாஸ்தவ [சிவே! காமாக்ஷி! ரோசிஷ்ணவ: |
பீடா கர்மட கர்ம கர்ம ஸமயவ்யாபார தாபானல ச்ரீபாதா: நவ வர்ஷ ஹர்ஷண ஸுதாஸ்ரோதஸ் [விநீசீகரா:॥

சிவே! காமாக்ஷி! மங்களமூர்த்தியான காமாக்ஷியே. பீடா கர்மட கர்ம கர்மஸமயவ்யாபார தாபானல ஸ்ரீ பாத:- பீடையையே தொழிலாகக்கொண்ட கோடை காலத்தின் செய்கையாகிற தாபாக்கிக்கு, ஜலப்பெருக்கு போன்றதாயும். நவ வர்ஷ ஹர்ஷண ஸுதாஸ்ரோதஸ்வினீ சீகரா:- புதிய வர்ஷிப்பினல் ஸந்தோஷிக்கச்செய்கிற அம்ருத அருவியின் துளிகளாயும். ரோசிஷ்ணவ:- பிரகாசிக்கின்ற. தவ- உனது. அல்பஸ்மிதஜ்யோதிர்மண்டல சங்க்ரமா:- மந்தஸ்மித தேஜஸ்ஸின் கூட்டங்களுடைய போக்குகள். அஸ்மாகம்- எங்களுடைய கல்மஷபயாநி- பாபபயங்களை. க்ஷோபீய:- நன்கு. க்ஷபயந்து- போக்கடிக்கட்டும்.

92 ஸ்ரீ காமாக்ஷி! தவஸ்மிதைந்தவமஹ: பூரே பரிஸ்பூர்ஜதி ப்ரௌடாம் வாரிதி சாதுரீம் கலயதே பக்தாத்மனும் ப்ராதிபம் |
தௌர்கத்யப்ரஸரா: தம:படலிகா ஸாதர்ம்யமாபிப்ரதே |
கிம் கிம் கைரவ ஸஹாசர்யபதவீ ரீத்யாம் நதத்தே பதம்॥

ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே. தவ- உனது. ஸ்மிதைந்தவமஹ: பூரே- புன்சிரிப்பாகிற சந்திர ஒளியின் கூட்டமானது. பரிஸ்பூர்ஜதி- விளங்கிக்கொண்டிருக்கையில். பக்தாத்மனும்- பக்தர்களுடைய. ப்ராதிபம்- புத்தியானது. ப்ரௌடாம்- உயர்ந்த வாரிதி சாதுரீம்- ஸமுத்திரத்தின் சாதுர்யத்தை. கலயதே- அடைகிறது. தௌர்கத்யப்ரஸரா:- துரதிருஷ்டங்களின் பரவுதல்கள். தம: படலிகா ஸாதர்ம்யம்- இருள் கூட்டத்தின் நிலைமையை. ஆபிப்ரதே- அடைகின்றன. கிம் கிம்- மற்றவை எவை எவைதான், கைரவ ஸஹசர்ய பதவிரீத்யாம்- ஆம்பல் புஷ்பத்தின் நிலைமையில். பதம் இருப்பை ந தத்தே- அடைவதில்லை?

93 மந்தாராதிஷு மன்மதாரி மஹிஷி! ப்ரகாச்யரீதிம் நிஜாம் |
காதாசித்கதயா விசங்க்ய பஹுசோ வைசத்ய முத்ராகுண: |
ஸ்ரீ காமாக்ஷி! ததீய ஸங்கமகலா மந்திபவத்கௌதுக: |
ஸாதத்யேன தவ ஸ்மிதே விதனுதே ஸ்வைராஸனுவாஸனும்॥

மன்மதாரிமஹிஷி! மன்மதசத்ருவின் பார்யையான, ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே, வைசத்யமுத்ராகுண: - நிர்மலமான வெளுப்பு குணமானது, மந்தாராதிஷு - மந்தாரபுஷ்பம் முதலியவைகளில், நிஜாம் - தன்னுடைய, ப்ரகாச்யரீதிம் - ப்ரகாசிக்கும் தன்மை, காதாசித்கதயா - ஏதாவது ஒரு ஸமயத்தில் உண்டாகிறதென்பதாக, பஹுச: விசங்க்ய - அடிக்கடி ஆலோசித்து, ததீயஸங்கமகலா மந்தீபவத்கௌதுக: - அவைகளோடு சேருவதில் உத்ஸாகக்குறைவு உள்ளதாய், தவஸ்மிதே - உனது புன்சிரிப்பில், ஸாதத்யேன - ஸ்திரமாக, ஸ்வைராஸனுவாஸனும் - கவலையற்றவஸிப்பை, விதநுதே - செய்துகொண்டிருக்கிறது.

94 இந்தானே பவவீதிஹோத்ர நிவஹே கர்மௌக சண்டாநில ப்ரௌடிம்னா பஹுளீக்ருதே நிபதிதம் ஸந்தாப சிந்தா குலம் |
மாதர்மாம் பரிஷிஞ்ச கிஞ்சதமலை: பீயூஷ வர்ஷைரிவ ஸ்ரீ காமாக்ஷி தவஸ்மிதத்யுதிகணை: சைசிர்ய [லீலாகரை:॥

மாத:! தாயான. காமாக்ஷி! காமாக்ஷியே. அமலை:- பரிசுத்தங்களாயும், சைசிர்ய லீலாகரை:- மிகவும் குளிர்ச்சியைக் கொடுபனவாயும். பீயூஷவர்ஷைரிவ- அம்ருத வர்ஷம் போன்றதுகளாயிருக்கிற. தவ- உன்னுடைய. ஸ்மிதத்யுதிகணை:- புனசிரிப்பின் காந்திக்கூட்டங்களால், கர்மௌக சண்டாநிலப்ரௌடிம்னா- கர்மஸமூஹமென்கிற பெருங்காற்றின் வேகத்தினல். இந்தானோஜ்வலிப்பதாயும், பஹுளீக்ருதே- அதிகமாயுமிருக்கிற பவவீதிஹோத்ர நிவஹே- ஸம்ஸாரமென்னும் அக்னியில். நிபதிதம், விழுந்தவனும். ஸந்தாப சிந்தாகுலம் - ஸந்தாபத்தினலும், கவலையினலும் கலங்கியிருக்கிற. மாம்- என்னை கிஞ்சித்- கொஞ்சம், பரிஷிஞ்ச- நனைப்பாயாக.

95 பாஷாயா: ரஸனக்ரகேலனஜுஷ: ச்ருங்கார முத்ராஸகி |
லீலாஜாதரதே: ஸுகேந நியமஸ்னானய மேனத்மஜே |
ஸ்ரீ காமாக்ஷி! ஸுதாமயீவ சிசிரா ஸ்ரோதாஸ்வினீ தாவகீ |
காடானந்த தரங்கிதா விஜயதே ஹாஸப்ரபா சாதுரீ॥

மேனத்மஜே! மேனையின் புத்திரியாகிய ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே, தாவகீ - உனது, கடானந்ததரங்கிதா - த்ருடமான ஆனந்தத்தோடு அலைபொங்கியதான, ஹாஸப்ரபாமஞ்ஜரீ - புன்சிரிப்பின் காந்தியானது, ரஸனக்ரகேலனஜுஷ: - நாக்குநுனியில் விளையாடிக்கொண்டிருக்கிறதும், ச்ருங்காரமுத்ராஸகீலீலாஜாதரதே: - ச்ருங்கார முத்ரையாகிய தோழியுடன் விளையாடுவதில் ஆசையுள்ளவளாயுமிருக்கிற பாஷாயா: - வாக்கு என்னும் ஸரஸ்வதிக்கும், ஸுகேன - ஸுகமாக, நியமஸ்னாய - நியமத்தோடு ஸ்னாநம் செய்வதற்கு ஏற்பட்ட, சிசிரா - குளிர்ந்த, ஸுதாமயீ - அம்ருதமயமான, ஸ்ரோதஸ்வினீ இவ - நதியைப்போல, விஜயதே - விளங்குகிறது,

---

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸு தை-மீ 5௨

கவர்மெண்டின் பிடிவாதம்

ஆலயப்பிரவேசச் சட்டத்தை ரத்து செய்யவோ, அல்லது அமுல்நடத்தாமலிருக்கவோ வேண்டுமென்று மதுரை ஸநாதனத் தலைவர்கள் ஒரு தூது கோஷ்டி மூலம் செய்து கொண்ட வேண்டுகோளுக்கு சென்னை கவர்ன்மெண்டார் பதில் எழுதியிருக்கிறார்கள். சட்டத்தை நிறுத்தி வைக்கவோ, ரத்து செய்யவோ முடியாதென்றும் தீண்டாத ஜாதியார் கோவில் பிரவேசத்தில் சிரத்தை காட்டவில்லை யென்பதை கோவில் நிர்வாஹிகளுக்கு திருப்திகரமானமுறையில் நிரூபணம் செய்துகொடுத்தால், இப்போது அசுத்தமான கோவில்களுக்கு ஸம்ப்ரோக்ஷணம் நடத்தத்தடையில்லையென்றும், ஆனால் ஸம்ப்ரோக்ஷணம் நடந்த பிறகு மீண்டும் தீண்டாதார் அந்தக்கோவிலில் நுழைவதை கவர்ன்மெண்டார் தடுக்க முடியாதென்றும் அந்த பதிலில் ஸர்க்கார் கூறியிருக்கிறார்கள். இந்த பதிலானது ஆஸ்திக ஸமூகத்தின் மனதைப்புண்படுத்தக்கூடியதென்பதில் ஸந்தேஹமில்லை. மிகவும் கண்டிக்கத்தக்க இந்த பதிலைப் பற்றி நாம் எவ்வித விமர்சனமும் செய்யவேண்டியது அவச்யமில்லை.

இந்தியா கவர்ன்மெண்டாரும், சென்னை கவர்ன்மெண்டாரும் ஆதி முதற்கொண்டு காட்டிவரும் மனோபாவத்திலிருந்து, இப்போது வந்துள்ள பதிலானது ஆஸ்திக ஸமூஹத்திற்குப் புதிதாக ஆச்சர்யத்தையோ, ஏமாற்றத்தையோ கொடுக்கக்கூடியதன்று. ஆதலால் ஸனாதநிகள் இந்த பதிலிலிருந்து ஏதோ புதிய நிலைமை ஏற்பட்டிருப்பது போல் நினைத்துக்கலக்கமோ, அதைர்யமோ அடையவேண்டிய அவச்யமில்லை. தங்களுடைய பிரசார வேலைகளை மேலும் தீவ்ரமாக ஸனாதநிகள் நடத்திக்கொண்டு போகவேண்டியது அவச்யமாகும்.

காங்கிரஸ் மந்திரிகள் காந்தியைத்திருப்தி செய்து வைக்கவேண்டி ஆலயப்பிரவேசச் சட்டம் செய்து வைத்து, நீதி முறையை மீறியும் பிரஜைகளின் உரிமையைப்பறித்தும் விஷமம் செய்து விட்டார்கள். நிர்வாஹம் நடத்தும் கக்ஷியாரை அநுஸரித்துப்போக வேண்டியநிலைமையில் அப்போது கவர்னர் இருந்தபடியால் அந்தச்சட்டத்தை அவர் ரத்து செய்ய முடியாமலிருந்திருக்கலாம். ஆனால் இப்போது மந்திரி ஸபை மறைந்து கவர்னரே நிர்வாஹம் நடத்தி வருவதால் ஏற்கனவே நடந்த நியாய விரோதமான கார்யத்தை அவர் சீர்திருத்த நியாயமான ஸந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அக்கார்யத்தைச் செய்யும்படியே மதுரை ஸனாதநிகள் கேட்டார்கள். ஆனால் கனம் கவர்னர் காங்கிரஸ் மந்திரிகள் இழைத்த அநீதியை தாம் நிவர்த்திக்க விரும்பவில்லையென்றும், அப்படியே வைத்திருக்க விரும்புவதாயும் சொல்லி விட்டார். இதிலிருந்து நமது பிரசார முறையானது கவர்ன்மெண்டாரின்மனதில் ஸரியாக உறைக்கவில்லை யென்று சிலர் நினைக்கலாம். ஆனால் கனம் போக்துரை மதுரைத் தலைவருக்கு எழுதிய ஒரு பதிலில் ஆலயப்பிரவேசச் சட்டத்திற்கு பலத்த ஆக்ஷேபம் இருப்பதையும், பொது ஜனங்களின் அதிருப்தியையும் கவர்ன்மெண்டார் நன்கு அறிந்திருப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். அப்படியிருந்தும் கவர்ன்மெண்டார் அந்த அநீதியை நிவிர்த்திக்க முன் வரமுடியாதென்று கூறுவதின் கருத்தென்ன? இதில் தான் வெள்ளைக்கார ராஜதந்திரம் விசேஷமாக அடங்கியிருக்கிறது. அதை நாம் விவரிக்கவேண்டியதில்லை. இந்த நிலைமையில் நாம் மீண்டும், மீண்டும் கவர்னரையும், வைஸ்ராய் அவர்களையும் வேண்டிக் கொள்ளுவதில் பயனுண்டா? இந்த வழியை விட்டு நாம் வேறு வழியைப் பின்பற்ற வேண்டாமா? என்ற விஷயத்தையே நம்மவர்கள் முக்யமாக யோஜிக்கவேண்டியிருக்கிறது.

ஆலயப்பிரவேசச் சட்ட விஷயமாக இத்தேசத்திலுள்ள லக்ஷக்கணக்கான மக்கள் தங்களுடைய ஆக்ஷேபங்களை கவர்னருக்கும் வைஸ்ராயிக்கும் போதிய அளவு தெரிவித்தார்கள். பிரபல மடாதிபதிகளும், மதாசாரியர்களும், நீதி நிபுணர்களும், பண்டிதர்களும், பாமரர்களும், ஸ்திரீகளுமாக யாவரும் வெகு பலமான கண்டனத்தை வெளியிட்டியிருக்கிறார்கள். லக்ஷக்கணக்காக வரி செலுத்துவோர்களும், வோட்டர்களும் கண்டித்திருக்கிறார்கள். தலைமுறை தலைமுறையாக ஆஸ்திக பிரஜைகள் அநுபவித்து வந்த உரிமையானது பலாத்காரமாக அநீதியான முறையில் அழிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு அதிக்ரமம் நடந்து வருகையிலும் கவர்னரும், வைஸ்ராயும் நடந்து கொண்ட மாதிரியென்ன? ஆஸ்திக ஸமூஹத்தினரின் அபயக்குரலை அவர்கள் மதித்தனரா? நாம் ராஜ சக்ரவர்த்தியின் பிரஜைகளல்லவா? நாம் கோடிக்கணக்காக வரி செலுத்துவோரல்லவா? வோட்டர்களல்லவா? நம்முடைய பாத்யங்களைப் பாதுகாத்துக்கொடுக்க வைஸ்ராயும், கவர்னரும் கடமை பட்டிருக்கவில்லையா? அப்படியிருந்தும் அவர்கள் செய்ததென்ன? கணக்கற்ற தந்திகளும், தபால்களும் வைஸ்ராயிடம் குவிந்தனவே? அதற்கு என்ன பலன்கிடைத்தது? இம்மட்டுமில்லை. நியாயஸ்தலங்களின் உரிமையையும் கௌரவத்தையும் பாதிக்கக்கூடியவகையில், யுத்தகாலத்தில் போல் ஓர் அவசரச்சட்டத்தைப் பிறப்பிக்கவில்லையா? இதற்கு வைஸ்ராயும் அனுமதி கொடுத்தாரல்லவா? இவ்வளவு தெளிவாகவும் பிடிவாதமாகவும் அதிகாரிகள் நடந்து கொண்டிருக்கையில் அவர்களிடமே நாம் பிரார்த்தனைசெய்துகொண்டிருப்பதில் பயனுண்டா? சட்டத்தை நிறைவேற்ற உடந்தையாயிருந்தவர்களே, அதை ரத்து செய்ய முன்வருவார்களென்று நாம் நினைத்து எவ்வளவு நாள் ஏமாந்து நிற்பது? ஆழ்ந்து கிடக்கும் அவர்களுடைய ராஜ தந்திர முறையை அறிவது கஷ்டமாயினும், சிறிதாவது அதை அநுபவத்தில் பார்த்து வருகிறோமல்லவா? ஆலயப்பிரவேசச் சட்டத்தை ரத்து செய்வதனால் தங்களுக்கு ஏற்படக்கூடிய ஸாதக பாதகங்களை ராஜ தந்திர முறையில் அவர்கள் ஆலோசித்துச் செய்வார்களேயன்றி நமது கிளார்ச்சிக்காகச் செய்துவிட மாட்டார்கள்.

மேலும் மைனாரிடி ஸமூஹ பிரச்னையில், முஸ்லீம்களையும், தாழ்ந்த வகுப்பாரையும் பற்றியே அதிகாரிகள் கவலை காட்டுகிறார்கள். அவர்களுடைய உரிமைகளை ரக்ஷித்துக் கொடுப்பதிலேயே கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆயினும் தென்னிந்தியாவில் ஆலயப்பிரவேசச் சட்ட மூலமாக ஏற்பட்டுள்ள பெருத்த அநீதிக்கும், பிரஜைகளின் உரிமை பங்கத்திற்கும், இதுவரையில் இந்தியா கவர்ன்மெண்டார் எவ்வித கவலையும் எடுக்கவில்லை. ஆனால் இப்போது நடக்கும் ராஜ்ய விவாதத்தில் தாழ்ந்த ஜாதியார் விஷயமானது ராஜ தந்திரத்துடன் முன்னணியில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நம்முடைய வேண்டுகோளை மதிக்காததற்கு இதுவும் ஓர் காரணமல்லவா?

ஆகையால் நமக்குள் ஏற்படும் சச்சரவுகளில் அன்னிய ஜாதியாரான அதிகாரிகளிடம் நாம் நிவர்த்தி தேட விரும்புவது பயனற்றதாகுமென பல தீர்க்கதரிசிகள் நினைப்பது நியாயமென்றே ஏற்படுகிறது. ஆகையால் சிறிது காலமாக ஸனாதநிகள் பொதுக் கூட்டங்களில் செய்து வரும் ராஜபக்தி தீர்மானம், வைஸ்ராய்க்கு பிரார்த்தனைபோன்றவைகளால் மட்டும் கார்யசித்தி ஏற்படாதென்று சென்னை கவர்ன்மெண்டார் இப்போது கொடுத்துள்ள பதிலிலிருந்து தெளிவாகவில்லையா? ஆகையால் நாம் வேறு தக்க வழியை யோஜித்துக் கண்டுபிடிக்க வேண்டிய அவச்யம் ஏற்பட்டிருக்கிறது.

காரைக்குடியில் ஆலயப்பிரவேச கண்டனம்

ஸ்ரீ நடேசய்யர் விஜயம்

காங்கிரஸ்காரர் விஷமம்

13—1—40௨ சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஸனாதனதர்ம ஸம்ரக்ஷண சபையின் சார்பில் அறுபத்துமூவர் மடத்துக்கு முன்பு ஸனாதனிகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஏராளமாக ஜனங்கள் வந்திருந்தார்கள். இதில் அநேக ஸ்திரீகளும் இருந்தார்கள்.

முதலில் மதுரை, அகில இந்திய வர்ணாச்ரம சுராஜ்ய சங்கத்தலைவர் ராவ்சாகேப் N. நடேசய்யர் அவர்களையும், ஸ்ரீ என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களையும் மற்றும் மதுரையிலிருந்து வந்திருந்த கனவான்களையும் ஸ்ரீமதிகள் எ. எஸ். மீனாக்ஷி அம்மாள், சேஷம்மாள், குப்பம்மாள், செல்லம்மாள் மற்றும் எல்லா ஸ்திரீகளையும் நா. லெ. கு வேதபாடசாலையிலிருந்து முத்துப் பட்டணம் ஸஹஸ்ரநாமபாராயண கோஷ்டி பாராயணத்துடன் ஊர்வலமாக அறுபத்துமூவர் மடத்துக்கு அழைத்து வரப்பெற்றது.

முதலில் தெய்வ ஸ்தோத்ரம் பாடப்பெற்றது. இவ்வூர் தமிழ் சங்கீத வித்வான் பிரம்மஸ்ரீ ராமஸாமி அய்யர் அவர்கள் அக்ராஸனம் வகிக்கும்படி உப அக்ராஸனர் ஸ்ரீ S. ரெகுநாதய்யங்கார் பிரேரேபிக்க ஸ்ரீ அய்யர் முதலில் அக்ராஸனம் வகித்தார்கள்.

இரண்டாவதாக கோட்டையூர் ஸ்ரீமான் க. வீ. சொ. அளகப்ப செட்டியாரவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள்.

மதுரை ராவ்சாகேப் என். நடேசய்யர் அவர்களால் ஸபை கூடியிருப்பதின் நோக்கத்தை எடுத்துரைத்து, தீண்டாதார் ஆலயப்ரவேச எதிர்ப்பு விஷயமாய் ஸனாதனிகளுடைய வேண்டுகோளை அங்கீகரிக்க முடியாமலிருப்பதாக மதராஸ் கவர்ன்மெண்டார் அவர்களிடமிருந்து வந்த லெட்டரைப்படித்துக்காட்டி இவ்வித செய்கைக்காக வருந்துவதாயும் அதைக்கண்டித்துப்பேசியும் இதை நிவர்த்திக்க ஒவ்வொரு கிராமத்திலும் டவுனிலும், ஜில்லாவிலும் சங்கங்களை அமைத்து அவைகளின் மூலம் நமது வேண்டுகோளை மறுபடியும் கனம்கவர்னர் துரையவர்களுக்கும் கனம் வைச்ராய் அவர்களுக்கும் மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியவர்களுக்கும் தெரிவித்தும் தூதுகோஷ்டிகள் சென்று அவைகளைத் தெரிவிப்பதென்றும் எடுத்துரைத்தார்.

இதற்கிடையில் சில காங்கிரஸ்காரர்களால் ஏற்பட்ட இடஞ்சல்களின் நிமித்தம் போலீசார்களை உதவிக்கு அழைத்துவர நேரிட்டது.

பிறகு மதுரை வக்கீல் ஸ்ரீமான் என். ஆர், கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் காங்கிரஸ் மகா சபை ஏற்பட்டது முதல் 1919-ம் ஆ வரை ராஜீய விஷயங்களைத் தவிர மத விஷயங்களில் தலையிடாமலிருந்ததைப்பற்றியும், பிறகு மதத்தில் தலையிட்டு அதற்காகச் செய்திருக்கும் சட்டங்களைப் பற்றிக் கண்டித்துப் பேசியும், இவைகளை நிவர்த்திக்க சில மார்க்கங்களையும் மிக வி ரிவாய் எடுத்துரைத்தார்.

பிறகு அடியிற்கண்டவர்களாலும் உபன்யாசங்கள் செய்யப் பெற்றன.

ஸ்ரீமான்கள் சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள், கே, வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள், மணி அய்யர் அவர்கள், ஜெகதீசய்யர் அவர்கள். ஸ்ரீமதிகள் எ. எஸ். மீனாக்ஷி அம்மாள், சேஷம்மாள், குப்பம்மாள், செல்லம்மாள்.

இன்று கூட்டத்தில் பெண்களின் உபன்யாசம் மிகவும் போற்றத்தக்கதாயும், எல்லோராலும் ஆச்சரியப்படத்தக்கதாயுமிருந்தது. இதில் ஸ்ரீமதி செல்லம்மாளின் உபந்யாசம் சபையோர்களின் மனதைப்பரவசப் படுத்தியது.

20—1—40உ சனிக்கிழமை கோட்டையூரில் நடக்கும் ஸனாதனிகளின் மகாநாட்டுக்கு எல்லோரையும் வரவேண்டுமென்று ஷை மகாநாட்டு உபசரணையாளர் ஸ்ரீமான் க. வீ. சொ. அழகப்ப செட்டியார் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பெற்றது.

சபையின் உப அக்ராஸனாதிபதி ஸ்ரீ எஸ். ரெகுநாதய்யங்கார் அவர்களாலும், காரியதரிசி ஸ்ரீ மெய்யப்பசெட்டியாரவர்களாலும் வந்தனோபசாரங்கள் நடைபெற்று, புஷ்ப மாலைகள் அணியப் பெற்றன. மதுரை ஸ்ரீமதிகள் எ. எஸ் மீனாக்ஷி அம்மாளாலும், சேஷம்மாளாலும் மங்களம் பாடப் பெற்று இரவு 11 மணிக்கு ஸபை இனிது முடிவெய்தியது.

காரியதர்சி.

பஞ்சாக்ஷர அகவல்
ஷடாக்ஷர அகவல்

அகத்திய மகா முனிவர் அருளிச்செய்த இவைகள் குருபதேச முறைப்படி பரிசோதித்து சுத்தப்பதிப்பாக பட்டீச்சுரம் நேடிவ் டாக்டர் ஸ்ரீமான் எம். கே. ஸாது ஸ்ரீ இராமஸ்வாமி சர்மா அவர்களால் பதிப்பிக்கப் பெற்றன. விலை அணா 4.
கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக் கூடம், லிமிடெட்., கும்பகோணம்.

உலகம் சிரிக்கிறதே!

நால் நூற்று ஸ்வராஜ்யம்? அப்படியுமா ஓர் கொள்கை "நால் நூற்றுத்தான் ஸ்வராஜ்யம் வரமுடியுமென்றால் ஸ்வராஜ்யமே நமக்கு கிடைக்காதே" என்று முறையிட்டுக்கொண்டார் காந்திஜியிடம் அவர் நண்பர் ஒருவர். அதற்கும் அதே பிடிவாத பதில் தான். "என் இரண்டு நிபந்தனைகளுக்கும் (சர்க்காவும், ஸஹோதர பாவமும்) உள்பட்டு உறுதி செய்து கொடுத்தால் தான் நான் ஸத்யாக்ரஹப் போரைத் தொடங்க உத்திரவுகொடுப்பேன் என்று சொல்லி விட்டார்.

ஸஹோதர பாவம் வேண்டியது தான். ஆயினும் அதற்காக எவ்வளவு அவமானம் ஏற்படினும் பொறுத்தே ஆகவேண்டுமென் பதில்லை. அது போகட்டுமே. ஸ்வயராஜ்யத்திற்கும் சர்க்காவுக்கும் என்ன ஸம்பந்தம் என்பது தான் விளங்கவில்லை. விளக்க முற்படும் பொழுதெல்லாம் இன்னும் ஆழமாக சிக்கிக்கொள்ளுகிறார் காந்திஜி. அவ்வளவு தான். நாம் யோஜித்துப் பார்ப்போம் ஸ்வராஜ்யமின்றியே சர்க்காவின் கார்யம் நடக்க முடியுமா முடியாதா? சர்க்காவின்றியே ஸ்வயராஜ்யம் உலகில் அடைந்ததுண்டா இல்லையா? பின் ஏன் இரண்டையும் சேர்த்துச்சேர்த்து உருமாற்றவேண்டும்? சர்க்காவில் நம்பிக்கை இருந்தால்தான் ஸ்வராஜ்யப்போர் ஆரம்பிக்கலாம் என்று காந்திஜீ கூறி விட்டதனால் ஸ்வயராஜ்யத்திற்காக பாடுபடத் தயாராக வந்த அனேகர் இந்த வாக்குறுதி தினத்தில் கலந்து கொள்ளக் கூடாமல் திரும்பி விடுகின்றனர். அனேக ஸத்யாக்ரஹிகள் 26உ அன்று இந்த சபதம் செய்து கொள்ளப்போவதில்லை.

ஆமாம். இவ்வளவுவிசாலநோக்கம் உள்ள காந்திஜீதான் ஏன் இப்படி ஒரே பிடியென்று பிடிவாதம் பிடிக்கவேண்டும்? இந்த "அர்த்தமில்லாத நிபந்தனையை நிறைவேற்றத்தான் வேண்டுமென்று ஹடம்செய்வதேன்? உலகினர் இகழட்டும்! இந்தியர் சிரிக்கட்டும்! நான் என் அபிப்பிராயத்தை மாற்றமாட்டேன்" என்று சொல்லிவிட்டதால் காங்கிரஸ் தலைவர்களும் அப்படியே என்று ததாஸ்து பாடிக்கொண்டு தீர்மானித்துவிட்டனர். கட்டுப்பாடு, கட்டுபாடு என்று சொல்லிச் சொல்லி காங்கிரஸ்காரர்களுக்கு ஸ்வய அறிவையும் பகுத்தறிவையும் காங்கிரஸ் நசுக்கிவிட்டது. ஆகையால் எது வேண்டுமானாலும் இனி காங்கிரஸில் நடக்கலாமல்லவா? ஜவஹர்லாலைப் போன்ற அறிவாளிகளும் இதற்குட்பட்டு இந்த அத்தைப்பாட்டிச்சர்க்காவை நம்பி சபதம் செய்யத் தயாராகிவிட்டனர்!

இந்த ஆட்டுமந்தைகளைக்கொண்டா? ஓர் புறட்சி இயக்கமா? புறட்சியின் ஸாதகமோ ஸித்திக்கும்? தலைவர்களையும் அவச்யம் நேரிட்டால் மாற்றி புதிய முறையையும் ஸாதனையையும் அமைக்க ஆற்றல் வாய்ந்தவரன்றோ புறட்சி இயக்கத்தை நடத்தவல்லவர். அஹிம்ஸாமார்க்கத்தை கைக்கொள்ள வேண்டாமென்று யாரும்சொல்லவரவில்லை அஹிம்ஸாதர்ம ப்ரவர்த்தகரான புத்தரோ மஹாவீரரோ சர்க்காவையா கையில் தரித்தனர்? உலகம் சிரிக்கிறது! அவதியுடன் அவமானமும் வேண்டுமா? போதுமே இந்தத் தலைவர் நமக்குச் செய்துவைத்தது

"மஹாராட்டா பத்ரிகை"

TEMPLE ENTRY ACT.

Mr. T. E. Satagopachariar's Criticism.

The following are the extracts from the Reception Address of Mr. T. E. Satagopachariar, Advocate, Cuddalore, which he delivered at the Madras V. S. Sanga Conference, held recently at Chidambaram.

Let us take the Temple Entry Act and its portentous harbinger, the Madura Temple Entry Ordinance. The extreme injustice, nay inhumanity of this measure which most callously trample under foot the religious conscience of the people and the holy tradition of ages is more than surpassed by the methods adoptes by its sponsors. Let us just recall the days Lord Curzon's Viceroyalty when the Government introduced a Bill in the Imperial Legislative Council for validating a technical omission in the newly passed Indian Universities Act. Although nothing could be said against the Bill on its merits in as much as it merely sought to get over a formal defect yet the principle of restoring to validating legislation however innocuous it might be in the particular instance was most vehemently condemned by Mr. Gokhale whose fiery speeches on the occasion were admired and echoed throughout the length and the breadth of the country; and it might rightly be said by reason of this he rose much higher in the estimation of the people which paved the way for his leadership of the Congress. Is it not, brethren, a melancholy contrast to find in these days a Congress Prime Minister himself a Hindu and a Brahman to boot, employing all his ingenuity to rush through the legislature a validating Act for the purpose of condoning one of the most heinous offences against the Hindu Religion perpetrated by some of his favourites at Madura who defiled the great Temple of Sree Minakshi Sundareswara in order to prevent the law taking its due course against the offenders? Again we have known our political leaders crying hoarse times without number whenever the Executive head of the administration sought to pass an Ordinance even it was intended to prevent crimes against the State during a time of war on the ground that it was not sound principle to get anything done over the head of the legislature unless the matter was so grave and the emergency so great from a national point of veiw that delay meant danger to the country. Applying this principle to the Madura Temple-Entry ordinance which legalised a flagrant crime and a religious sacrilege wantonly committed by some mischief makers, will it be too much to say that this Ordinance marks the lowest level of administrative morality? It might be that these grotesque exhibitions of new gotten power were acclaimed at the time as a party-success and afforded pleasure to the ministers who with the aid of a packed and paid majority were able to have their own way in the councils for the time being; but a little reflection in cooler moments of which they must have plenty at present, will bring home even to them how small is the value of that transitory pleasure before the great national danger that their action will prove to be by serving as a handy precedent to all who may come in future to wield authority.

ஸ்ரீK. V. சுப்ரமணிய சாஸ்திரிகள் பிரசுரங்கள்.

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்த்ரஸ்தவம்	1	0	0
ஸௌனீதிகுசமாலா	0	8	0

கிடைக்குமிடம்.— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்,

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— டாக்டர் T. S. சவுரிராஜன் L. D, SC. ஆயிகுளம்ரோட் கும்பகோணம்

ஹிந்துக்களுக்கு காங்கிரஸ் செய்த அநீதிகள்.

ஸ்ரீ ஸவர்காரின் சாட்டை

ஹிந்துஸபை தலைமைபிரஸங்கம்

சிலவிசேஷக் குறிப்புகள்

சென்றமாதம் கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய ஹிந்துமஹாசபைக் கூட்டத்தில் தலைமை வஹித்த ஸ்ரீமான் விநாயக, தாமோதர ஸவர்கார் செய்த தலைமைப்பிரஸங்கத்திலுள்ள சில விசேஷ அம்சங்களை மட்டும் கீழேகுறிக்கிறோம்.

காந்திஜீயின் பக்ஷபாதம்

"ஹைதராபாத்தில் ஹிந்துக்களுக்கு விரோதமான முறையை எதிர்த்துப்போராட 15 ஆயிரம் ஸத்யாக்ரஹிகள் முன் வந்தனர். இந்த இயக்கத்தில் நமக்கு தர்ம ரீதியான வெற்றி கிடைத்திருக்கிறது.

சென்ற 20 வர்ஷங்களாக ஹிந்துக்கள், காங்கிரஸானது தேசியமென்று நற்சாட்சி பத்திரம் கொடாத எதையும் ஆரம்பிக்கத்துணியாமலிருந்தன. இந்த காங்கிரஸ் மயக்கத்தை நிஜாம் ராஜ்ய ஸத்யாக்ரகம் போக்கிவிட்டது.

காங்கிரஸ், தேசியமென்று கூறுவதெல்லாம் 100-க்கு 99வீதமுள்ள ஹிந்துக்களுக்கு விரோதமானதாகவே இருக்கிறது. காச்மீரத்தில் 100க்கு 85 வீதமுள்ள முஸ்லீம்கள் ஆயுதம் தரித்து பஹிரங்கமாகக் கலஹம் செய்தபோது காந்திமஹான் சொன்னதென்ன? காச்மீரத்தின் ஹிந்து மஹாராஜாவானவர், முஸ்லீம்களின் அதிருப்தியைப் போக்கி அவர்களை திருப்தி செய்யாவிடில், முஸ்லீம்களை ஆள அந்த ஹிந்து ராஜாவிற்குவிற்கு உரிமை கிடையாதென்றும், அவர் உடனே தமது பட்டத்தை விட்டு விட்டு காசிக்குப் போய்விட வேண்டுமென்றும் ஜனநாயக முறையில் ஊறித்திளைத்த காந்திஜி அப்போது எழுதினார். ஆனால் அதே காந்தி, 100க்கு 85 வீதமுள்ள நிஜாமின் ஹிந்து பிரஜைகள் நிராயுதபாணிகளாகயிருந்து, தங்களது மத, கலாஞான ராஜீயத் துன்பங்களை போக்கிக் கொள்ளுவதற்காக ஸத்யாக்ரஹம் செய்கையில் ஜனநாயக முறையில் மிகுந்த ஆர்வமுள்ள காந்திஜீ நிஜாமுக்கு யோசனை கூறி அவர் ஒழுங்காக ஹிந்து பிரஜைகளை நடத்தவேணுமென்றும், இல்லையேல் நிஜாம் அரசர் மெக்காவுக்குப் போய்விட வேணுமென்றும் ஏன் யோஜனை கூறவில்லை?

அதற்குப் பதிலாக, சட்ட மறுப்பு இயக்கத்தால் நிஜாமுக்கு ஸங்கடமுண்டாக்கக்கூடாதென்பதிலேயே கவலை கொண்டிருந்தார்.

ஹைதராபாத் ஸர்க்கார் செய்கையை பிரிட்டிஷ் பார்லிமெண்ட் மெம்பர்கள்கூட ஆக்ஷேபித்தனர். ஆனால் ஏழு மாகாணங்களில் ஆக்ஷி செய்த காங்கிரஸ் மந்திரிகள் இதைப்பற்றி வாய் திறக்கவில்லை.

ஒரு தாலூகா போன்ற சிறிய ராஜ்யமாகிய ராஜ்கோட் பிரச்னைக்காக, மந்திரி ஸபையை ராஜிநாமா செய்து நெருக்கடி உண்டு பண்ணுவதாக பயமுறுத்திய காங்கிரஸ் மந்திரிகள், யதேச்சாதிகாரம் மிகுந்த நிஜாம் ராஜ்யத்திலுள்ள பிரஜைகளின் உரிமையை நிலை நாட்டுவதற்காக ராஜிநாமா செய்வோமென்று ஏன் பயமுறுத்தவில்லை?

ஹிந்து மஹா ஸபையின் மந்திரி ஸபை இருந்திருந்தால் இப்படி நடக்குமா?"

ஹிந்துஸ்தான் தேசம்

"பாரத பூமியைத் தனது தாய் நாடாகவும், தனது மதம் தோன்றிய புண்ய பூமியாகவும் கருதுகிற ஒவ்வொருவரும் ஹிந்து ஆவார்.

இந்தியா நமது பிதுர் பூமியும் புண்ய பூமியுமாகும். கலா, ஞான, மதத்துரைகளில் ஒன்றுப் பட்டிருப்பதால் ஹிந்துக்களாகிய நாம் ஒரு பொது தேசிய ஜாதியினராவோம்.

ஹிந்துக்களின் தாய் நாட்டை ஹிந்துஸ்-தானமென்று அழைக்க வேண்டும். நம் நாட்டிற்கு நாமே அதிபதிகளாக இருக்க வேண்டும்"

ஸம்ஸ்கிருத பாஷை

"ஸம்ஸ்கிருத பாஷையை ஹிந்துயுவர்களுக்கெல்லாம் கற்றுக் கொடுக்க வேண்டும் அதிலிருந்து தோன்றிய ஹிந்தி பாஷையை நமது தேசிய பாஷையாகக் கொள்ளுவதால் மாகாண பாஷைகளுக்கு அவமானமுண்டாவதாக நினைக்க கூடாது"

மைனாரிடிகளின் உரிமை

"ஹிந்துக்களல்லாத மைனாரிடிகளின் உரிமைகள் ஸம்பந்தப் பட்ட மட்டில், மெஜாரிடியின் ஸம உரிமைக்கு எவ்விதத்திலும் குந்தக மேற்படாமல் அவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க உத்திரவாதம் செய்யப்படும் மேற்படி மைனாரிடிகள் செலுத்தும் வரிகளின் அளவுக்குத் தகுந்தவாறே அவைகளுக்கு ஸர்க்காரிடமிருந்து பலதுறைகளிலும் பண உதவிகிடைக்கும்"

காங்கிரஸ் செய்த அநீதிகள்

"கிலாபத் கிளர்ச்சி காலத்திலிருந்து காந்திஜீ தலைமையிலும், அவரைச் சேர்ந்தவர்களின் தலைமையிலும் ஹிந்து ஸமூஹமூகத்திற்கு காங்கிரஸ் செய்துள்ள தீங்குகள் கணக்கற்றவையாகும்.

காங்கிரஸ் மந்திரி ஸபைகளின் ஆக்ஷியில் நாம் கண்டதென்ன? முஸ்லீம்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளைக்காட்டிலும் அதிமாகக் கொடுக்கப் பட்டது. ஹிந்துக்களின் உரிமைகள் ஒடுக்கப் பட்டன. இது தான் காங்கிரஸ் ஆக்ஷியில் கண்டோம். மஹம்மதியர்களுக்கு காங்கிரஸ் வணங்கி இணங்கி, கேட்டதையெல்லாம் கொடுத்து வந்தது. இதைத் தெரிந்து கொண்ட முஸ்லீம்கள் மேலும் விரட்டுகிறார்கள்."

கவர்னர்களிடம் ஸர்டிபிகேட் கேழ்பதா?

முஸ்லீம்களின் விஷயத்தில் காங்கிரஸ் மோசமாக நடந்து கொண்டதென்று அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். அந்த மாதிரி நடக்கவில்லை யென்பதை நிருபணம் செய்வதற்காக காங்கிரஸ்காரர்கள் கவர்னர்களிடமிருந்தும், வைஸ்ராயிடமிருந்தும் ஸர்டிபிகேட் கேட்கிறார்கள்.

ஆனால் முஸ்லீம்களின் அட்டுழியங்கள் ஸஹிக்க முடியாததாக இருந்த ஸமயத்தில் ஹிந்துக்களாகிய நாம் பிரிடிஷ் ஸர்க்காரின் பாதுகாப்பைக்கோரியபோதுகாங்கிரஸ் தலைவர்கள் அதைக் கண்டித்தார்கள். இப்போதோ அவர்களே கவர்னர்களையும், வைஸ்ராயையும் மத்யஸ்தத்திற்கு கூப்பிடுகிறார்கள். என்ன விநோதம்?

காங்கிரஸ் ஆக்ஷிக் கொடுமையிலிருந்து மீண்டதற்காக மகிழ்ச்சி யடைந்து முஸ்லீம்கள் ஒரு தினத்தைக் கொண்டாடினார்கள் அதற்கு நேர் எதிராக ஏதாவது செய்ய வேணுமானால்,தாங்கள்தவறு செய்வதிலிருந்து திருந்திவிட்டதற்காக காங்கிரஸ்காரர்கள் ஒரு தினத்தைக்கொண்டாட ஏற்பாடு செய்யலாம்.

காங்கிரஸ்காரர்கள் ஹிந்துக்களுக்கு விரோதமாகவும், தேசீயத்திற்கு விரோதமாகவும் தாங்கள் நடந்து வந்ததை இனியேனும் கைவிடுவார்களா?

காங்கிரஸிலுள்ள காந்தி கோஷ்டியாருக்கு ஹிந்துக்கள் ஓட்டு செய்யக் கூடாதென்று ஸ்ரீஸவர்க்கார் கடைசியாக வேண்டினார்.

ஸம்ஸ்கிருத்தின் சிறப்பு

ஸ்ரீ. எஸ். ஸ்ரீ அய்யங்கார் அபிப்பிராயம்

திருச்சியில் சென்றவாரம் நடைபெற்ற ஸம்ஸ்கிருத ஸாஹித்ய பரிஷத்தில் தலைமை வஸித்த ஸ்ரீமான். எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்கள் ஸம்ஸ்கிருத பாஷையின் மேன்மையைப் பற்றிக் குறிப்பிட்டதாவது:-

"இந்தியனாகவுள்ள எவனும் ஸம்ஸ்கிருத பாஷையை விட்டு பிரிந்து இருக்க முடியாது. 12, 13, வது நூற்றாண்டு வரையில் ஸம்ஸ்கிருதமானது தேசத்தில் பேசும் பாஷையாக இருந்து வந்தது. திராவிடம் முதலிய ஸகல பாஷைகளும் ஸம்ஸ்கிருதத்திலிருந்தே உண்டானவைதான்.

இந்திய வேதாந்தம், சரித்திரம், கலை, நாகரீகம் ஆராய்சி முதலிய கார்யங்களுக்காக ஸம்ஸ்கிருதத்தை அப்யஸிக்க வேண்டியது அவச்யமாகும்.

ஸம்ஸ்கிருதம் பிராமணர்களுடைய மட்டும் பாஷையல்ல. எல்லோருக்கும் அது பொதுவானது. தேவாலயம், பரிஷத்துகள் ஆராய்ச்சி வேலைகள் இவைகளுக்காக ஸம்ஸ்கிருதம் அவச்யம் வேண்டும். ஸம்ஸ்கிருதத்திலுள்ள பல உயர்ந்த புஸ்தகங்களை தமிழிலும் மொழி பெயர்க்க வேண்டும்."

ஸ்ரீN. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

	Rs.	A.	P
ஸ்ரீ நாகர விமர்சனம்.	0	12	0
ஸ்ரீ குரு விமர்சனம்	0	5	0
வரிவஸ்யா ரஹஸ்யம்	1	0	0
ஸ்ரீ லலிதாத்ரிசதீ பாஷ்யம்	1	0	0

கிடைக்குமிடம் :— ஜனார்தன அச்சுக்கூடம், கும்பகோணம்,

Books by.
K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

	Rs.	A.	P
1. Kalidasa's Heroes	0	6	0.
2. The science of the soul	1	8	0
3. Manu, the friend of Man	0	8	0
4. Sandilya Bakthi Sutras	0	4	0
5. The Gospel of Gita	0	3	0
6. The future of Brahmin	0	2	0
7. The Gita ideal of devotion	0	4	0
8. நாரத பக்தி சூத்ரம்	0	2	0

J. T, சதாசிவய்யர் பிரசுரம்.

தேவிஸ்தோத்ரம்	0	6	0

ராமஸ்வாமி பிரசுரம்.

கைவல்ய நவநீதம்	1	0	0

கிடைக்குமிடம்;—ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

ஜனநாயகத்தின் தற்கால நிலைமை.

(திருமலைநல்லான்
சிரோமணி டி. ராமகிருஷ்ணய்யங்கார்)

சமீப காலமாக இவ்வுலகில் ராஜ்யம் என்பது நிலையில்லாமல் மாறி மாறி வருவதை நாம் சரித்திரங்களிலும், நேரிலுமறிகிறோம். முற்காலங்களில் ஒரு அரசனிடமிருந்து வேறொரு அரசனிடம் ராஜ்யம் செல்லுமேயன்றி, அரசனேயின்றியரசாங்கம் நடந்ததாக எங்குங் கண்டதில்லை. ஆனால் இக்காலத்திலோ சிலவிடங்களில் முடியாட்சி நீங்கிக்குடியாட்சி நடைபெற்று வருகிறது. அதன் தற்கால நிலைமை பற்றி யாராயலாம். ஹிட்லர், முஸோலினி போல்வார் தங்களையரசர் என்று அழைத்துக்கொள்ளவில்லையாயினும், அரசராகவே நின்று ஜர்மனி, இடாலி முதலிய தேசங்களை ஆட்சி செய்து வருகின்றனர். ஸ்பெயின் தேசம் குடியாட்சியினின்றும் தற்காலம் விடுபட்டுள்ளது. போலந்திலொரு பாகம் ஜர்மனி கைக்குள் சிக்கி ஜன நாயகத்தை யிப்பொழுது பறிகொடுத்திருக்கிறது. எனவே ஜனநாயகவாட்சியை ஏக நாயக ஆட்சி ஆக்ரமித்து வருவது கண்கூடு.

இப்பொழுது பிரிட்டிஷ் ஏக நாயகத்துக்கும் ஜர்மனி ஏகநாயகத்திற்கும் போராட்டம் நடக்கிறது. ஆனால் இது ஜனநாயகத்திற்கும் யதேச்சாதிகாரத்திற்கும் நடைபெறும் போராட்டமாகப் பறைசாற்றப்படுகிறது. நம் நாட்டுக்காங்கிரஸ் மஹாஸபை இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏகாதிபத்யக்கொள்கை இன்னும் பிரிட்டனுக்கு மாறவில்லையென்பது அதன் கருத்து. ஆனால் பெருவாரியான மக்கள் என்ன நினைக்கிறார்கள்? பிரிட்டனிடம் ஏகாதிபத்ய உணர்ச்சியுள்ளது உண்மையாயினும் இப்பொழுது நடைபெறும் யுத்தத்தில் நியாயம் அதனிடமேயிருப்பதால் அதற்கு உதவி செய்ய நாம் கடமைப்பட்டுள்ளோம். நிற்க, ஏகாதிபத்தியங்கலந்த ஜனநாயகமும், நாஸிஸமும் இப்பொழுது போராடி வருகின்றன. இப்போராட்டத்தின் இறுதியில் எந்தவாட்சி இவ்வுலகில் நிலைநிற்கும் என்று உறுதிகூற முடியாது. ஏனெனில் நாளுக்கு நாள் ஜனங்களுடைய மனம் மாறுபட்டு வருகிறது. இன்று பிடிப்பது நாளை வெறுப்புக்குள்ளாகிறது. ஜனநாயகத்தைவானளாவப்புகழ்ந்தவர்கள் நாளை அதையே இகழுகிறார்கள். இதற்கு ஒரு சிறு உதாரணம் கூறுவோம். சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற ஒய். எம். ஸி. ஏ விவாதத்தின்போது அரசியலில் ஆழ்ந்த அறிவும் அநுபவமும் வாய்ந்த மகாகனம் சாஸ்திரியார் ஜனநாயகவாட்சியில் சந்தேகமிருப்பதாகக்கூறியுள்ளார். தற்காலம் யுக்தியைக் கொண்டு வகுக்கப்படும் திட்டமும் நிலைநிற்காது. முடிவில் நம் முன்னோர் மொழிந்த முறையே துறையென யுக்தி வாதியர் இறங்குவர் என்பதில் இறையேனும் ஐயமில்லை.

எமது இக்கூற்றுச்சிலருக்குப்பிடிக்காது. நாம் ஜனநாயகவாட்சியை வெறுப்பதாகவும், இதற்குச்சுயநலந்தான் காரணம் என்றும் தேசிய வாதியார் என்று தங்களைத்தாமே கூறிக்கொள்பவர்நினைக்கக்கூடும். மேலே கூறிய எந்தவாட்சியிலும் எமக்கு விருப்போ, அன்றி வெறுப்போ கிடையாது. எமக்கு எவ்வாட்சியாயினும்சரி, அது நல்லாட்சியாயிருத்தல் வேண்டும். சுயவாட்சியாயினும் நம் மத சமூக கலா ஆசாரங்களுக்கு அது முரண்படுமாயின் அது நமக்கு தேவையில்லை. சுயவாட்சிக்காக மத சமூக உணர்ச்சியை மறந்துவிடவேண்டும் என்று சில அதிமேதாவிகள் கூறுகிறார்கள். அவர்களை நாம் கேட்கிறோம் சுயவாட்சி என்றால் என்ன? அது நமக்கு எதற்காக? நம்மை நாமேயாண்டு கொள்வதென்பது நம் மத ஸமூஹாதிகளை நாம் அழித்துக்கொள்வதா? பண்டைய குலாசாரங்களைப் பரிதபிக்கும் முறையில் புறக்கணிப்பது தான் சுயவாட்சியின் பொருளா? நம் மதத்தையும், நம் சமூஹத்தையும் பாதுகாத்துக்கொள்ளமுடியாத வாட்சிக்கு சுயவாட்சி என்று பெயரா? பொட்டைக்கண்ணனுக்குச் செந்தாமரைக் கண்ணன் என்று பெயரிட்ட கதைதானிது. நமது மத சமூகாதி உரிமைகள் நிலைநிற்பதற்குச்சுயவாட்சியா? அன்றி அவைகளை பறிகொடுப்பதற்கா? பிரஜாவுரிமை என்று நீங்கள் கூச்சலிடுவது மதாபிமானிகள் விஷயத்தில் செல்லுபடியாகாதா? முடியாட்சியுள்ள திருவாங்கூர் சமஸ்தானத்திலும் ஜனவாட்சியிருந்ததாகக் கூறப்பட்ட சென்னை மாகாணத்திலும் ஜாதி ஹிந்துக்களுக்குள்ள உரிமை பறிக்கப்பட்டு விட்டது. ஆதலின் அவ்விரண்டு கொடியவாட்சியை விட பிறவாட்சியாயினும் அது நல்லாட்சியாயின் அதுவே நமக்குப் போதும்.

சர்க்கார் மதவிஷயத்தில் தலையிட்டால் அதன் தேசியத் தன்மையழிவதோடு ஜனநாயகம் என்ற பெயரே போய்விடுகிறது. எமது திட்டமான வபிப்ராயம் யாதனின் விவேகியான தலைவரின் கீழ் நெறிதவறாமல் நடைபெறும் நல்லாட்சி ஜனநாயகத்தை விட எவ்வளவோ சீரியதாம் என்பதே. அவ்வாட்சியில் ஜனநாயகத் தன்மை பிரதிபலித்தே தீரும், தயரதனிராமனுக்கு முடிசூட்ட நினைத்தான் ஆயினும் நாட்டு மஹாஜனங்களின் அபிப்பிராயத்தை யவனறிந்துகொள்ளவில்லையா? ஜனநாயகவாட்சியேதான் வேண்டுமானாலும் இந்நிலையில் நம் நாடு அதற்குத் தயார் செய்து கொள்ள வேண்டிய அம்சங்கள் பலவிருக்கின்றன. முக்கியமாகக் கல்வியறிவு பொது மக்களிடையே நிலவவேண்டும். இது ஜனநாயகவாட்சிக்கு முக்கியமான வடிப்படை. ஜனங்களே எப்பொழுது அரசாளுகின்றனரோ, அப்பொழுது அவர்களுக்கு அரசியல் ஞானம் வேண்டும். தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ராணுவப் பயிற்சி வேண்டும் இதைத்தான் ஹிந்துமகாஸபை வற்புறுத்துகிறது. ஜனநாயக அஸ்திவாரமான இவ்விஷயங்களைப் புறக்கணித்துக் காங்கிரஸ் பதவி வகித்தகாலத்தில் ஆலயப்பிரவேசத்தை அவஸர அவஸரமாகச் செய்து பதவி இழந்தது. ஆலயப்பிரவேசச் சட்டம் ஒன்றே ஜனநாயகம் என்பதின் பொருளை காங்கிரஸ்காரர் இன்னும் நன்குணரவில்லையென்பதைக் காட்டுகிறது. ஹிந்துமதத்திற்குத் தீண்டாமையழுக்காயிருக்கட்டும். இதைப் பற்றி தேசிய காங்கிரஸ் சர்க்காருக்கு என்ன கவலை? தீண்டாதார், ஆலயப்ரவேசமில்லையானால் தாங்கள் பிரிட்டனில் குடியேறுவதாகக் கூறவில்லையே. நம் நாட்டில் தானேயிருக்கப் போகிறார்கள்' அவர்கள் எந்த மதத்தைத் தழுவினால் என்ன? முஸ்லீம்கள் மெஜாரிட்டியாகி விட்டால் காங்கிரஸுக்கு அதனால் என்ன? ஹிந்து மஹாஸபையானால் அதைப் பற்றிக் கவலைப்படலாம். காங்கிரஸ் ஹிந்துமத சீர்திருத்தச் சங்கமாக மாறினால் ஜனாப் ஜின்னா ஏன் அதை ஹிந்துக்கள் ஸபையென்று கூறக்கூடாது.?

ஆகவே, உயர்தர நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ், தேசிய தன்மையையிழக்கவிட்டது. தேசியமான ஸபையின் மூலம்தான் உண்மையான ஜனநாயகத்தை ஸ்தாபிக்க முடியும். அத்தகைய சபை நம் நாட்டில் இப்பொழுது இல்லை. உலகத்திலேயே ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் தற்கால நிலையில் யதேச்சாதிகாரக் காங்கிரஸ் தன் லக்ஷ்யத்துக்கு முரணாக ஜனநாயனுயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டது.

பழூவூர்

கீர்வாண வாணீ பரிஷத்

7—1—40 ஞாயிறு பகல் $12\frac{1}{2}$ மணிக்கு மேலேகண்ட பரிஷத்தின் கூட்டம் முத்தரசநல்லூர் பர்ண குடீரத்தில் நடைபெற்றது. அவ்வமயம் ஜம்புகேசுவரம் ஜகத்குரு வித்யாஸ்தானம் பிரின்ஸ்பால் போலகம் பிரம்ம ஸ்ரீ ராம சாஸ்திரிகள் அவர்கள் தலைமை வகித்து எம்மதமும் ஸம்மதம் என்ற விஷயம் பற்றி விஸ்தாரமாக சொற்பொழிவாற்றினார்கள். பல மதத்தினரும் தம் தம் மதத்திலேயே ஈடுபட்டுக்கொண்டு பிற மதத்தினரோடு ஒன்றுபட்டு உலக வாழ்க்கையை நடத்த வேண்டிய மாதிரியை நன்கு நிரூபணம் செய்தார்கள். பிறகு ஸ்ரீ S. V. சுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஸபை இனிது கலைந்தது.

எஸ். வி. சுப்ரமணியசாஸ்திகள்

அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்

திருப்புகழ் பாராயண திருமுறை	1	4	0
நால்வர் சரித்திரம் காலிகோ	0	12	0
,, ,, ராப்பர்	0	10	0
பாரதசாரம்	1	2	0
ஸ்ரீ ராமாயண வினாவிடை	1	8	0
பஞ்சரதனம்	0	12	0
ஷண்முக விஜயம்	0	12	0
ஸ்ரீ பாலஷண்முக விஜயம்	0	8	0
ருக்மணி	0	8	0
தேசிங்குராஜன்	0	10	0
ராஜாதேசிங்கு	0	5	0
திருக்குறள் நீதிக்கதைகள்	0	10	0
தசகுமார சரித்திரம்	0	6	0
திருப்புகழ் ரத்னமாலை	0	3	0
கந்தலங்காரம்	0	2	0
திருஞான சம்பந்தர்	0	2	6
விசாரசன்மர்	0	3	0
மூர்த்தி நாயனார்	0	3	0
திருநாவுக்கரசர்	0	2	0
குகன்	0	4	0
திருவகுப்பு	0	4	0
பாராயணத் திருப்புகழ்	0	2	0
வேல், மயில் விருத்தம்	0	1	0
திருப்புகழ் விருத்தியுரை	8	0	0
திராவிட வேதத்திரட்டு	3	8	0

கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்.)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,
தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை
&
ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

RINGWORM OINTMENT · AMRUTANJAN Ltd. · BOMBAY, MADRAS, CALCUTTA

நமது மதம்

தாபத்ரயம்

[எல். சுப்ரமணிய சாஸ்திரிகள் வீணை வித்வான்]

(முன் தொடர்ச்சி)

இவ்விதம் தாபத்ரயம் உலகை வாட்டுகின்றது. தாபத்ரயம் என்றால் என்ன? கவனியுங்கள்.

ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், என்று மூவகையான கொடிய துன்பங்கள்.

ஆத்யாத்மிகமாவது, தன்னைப்பற்றி வரும் கொடிய துன்பங்கள். அதாவது, வைத்ய சாஸ்திரத்தில் தெரிவித்திருக்கிற பலவித ரோகங்கள், மஹா ரோகங்கள். இவைகளால் சரீரத்திற்கேற்படும் கொடிய துன்பங்கள். இத்துன்பங்களை அனுபவிக்கின்றவர்களை பெரிய பெரிய ஆஸ்பத்திரிகளில் ஒருமிக்க பார்த்துக்கொள்ளலாம்.

ஆதிபௌதிமகாவது, இதர ப்ராணிகளால் வரும் கொடிய துன்பங்கள், அதாவது, புலி, கரடி, முதலிய மிருகங்களாலும், தேள், பாம்பு, முதலிய விஷஜந்துக்களாலும், இதர துஷ்ட மனிதர்களாலும், ஏற்படும் கொடிய துன்பங்கள.

ஆதி தைவிகமாவது, அவரவர் பழைய ஊழ்வினையின் மூலமாய் உலகில் அதர்மம் மேலிட்டு ஈசுவர கோபத்தால் நேரிட்டு ஏற்படும் கொடிய துன்பங்கள், அதாவது, பிறவி, அகால மரணம், துர்மரணம், நரை, மூப்பு, இடிவிழுதல், தூமகேது, சுழல் காற்று, திடீரென்று ஸமுத்ரம் பொங்குதல், உத்பாதம், மண்மாரி பெய்தல், ரக்தமாரி பெய்தல், நதிகளில் திடீரென்று பெருத்த பிரவாஹங்களினால் பெருத்த சேதங்கள், எரிமலை, பூகம்பம், திடீரென்று பெருத்த குழப்பம் அதிவிருஷ்டி அனாவிருஷ்டி இவைகளால் ஏற்படும் கொடிய துன்பங்கள்.

மேற்கூறப்பட்ட மூவகை துன்பங்கள் ஏற்படுவதற்கு மூலகாரணமென்னவென்று தற்கால சீர்திருத்தவாதிகள் கூறுவார்களா? இவர்களில் சில அசடுகள் 'நேச்சர்' என்று ஸ்வப்னத்தில் யானையைக்கண்டு மிரண்டு பிதற்றுகின்றவனைப்போல் பிதற்றுகின்றார்கள். இப்பேர்ப்பட்டவர்களுடைய இயற்கையின் லக்ஷணமும் செயற்கையின் லக்ஷணமும் அறியாத மூர்க்கத்தனந்தான் இயற்கையென்று சொல்லவேண்டுமே தவிர வேறு ஒன்றும் கூறுவதற்கில்லை.

இம்மூர்க்கர்கள் திருடனுக்கு தேள் கொட்டினாலும் மௌனமாயிருந்துவிடுவது போலவும், கோமுட்டிக்கு தேள் கொட்டினால் பிரம்மானந்தமென்று மறைத்துப்பேசுவது போலவும் இருப்பார்கள். இதுதான் இவர்களின் இலக்ஷணம் என்றறியத்தக்கது.

நம்முடைய ஸனாதன ஹிந்துமதத்திற்கு தற்கால சீர்திருத்தவாதிகளின் மனம் போன போக்கு எப்படியிருக்கின்றதென்றால் ஒரு பெரிய உத்யோகஸ்தன், தனக்கு கண்கள் கொஞ்சம் பார்வை மங்கலாயிருக்கின்றபடியால் நல்ல கண் வைத்யரிடம் காட்டவேணுமென்று தனது நண்பனிடம் யோசித்தார். அந்த நண்பன் தனக்குக் கண் வைத்யம் நன்றாய்த் தெரியுமென்று சொன்னான். அதை நம்பி அவ்வுத்யோகஸ்தன் ஒரு நாள் குறிப்பிட்டு வரும்படி சொல்லி தான் ஆபீஸிலிருந்து சீக்கிரமாய் வந்து சிரமத்தினால் ஒரு நாற்காலியில் முழங்காலை மடக்கி உட்கார்ந்துகொண்டு தன் தலைப்பாகையை மடக்கின முழங்காலில் வைத்து சாய்ந்துகொண்டு நண்பனின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ஷை நண்பனும் வந்து சேர்ந்தான். அந்நணபன், உத்தியோகஸ்தனையும் முழங்காலில் மாட்டியிருக்கும் தலைப்பாகையையும், பார்த்து சந்தேகம் கொண்டான். ஸார்! கண் வைத்யம் இவருக்கா? தங்களுக்கா? என்று கேட்டான். உடனே உத்யோகஸ்தர் ஓஹோ? இவருக்கு இரண்டாள்கள் போல் தோன்றியிருக்கிறதுபோலும். தலைப்பாகையை மாட்டின இடத்தை மனுஷனாகத் தோன்றுகிறதுபோலும் என்று அந்நண்பனைப்பார்த்து, நண்பரே தங்கள் கண்களுக்கே இவ்விடத்தில் இரண்டு மனிதர்கள் போல் காணப்படுகின்றபடியால் முதலில் தங்கள் கண்களைத் திருத்திக்கொண்டு அப்புறம் வாருங்கள் என்று மரியாதையாய் அனுப்பினாராம்.

ஆஸ்திக ஸகோதரர்களே! பாருங்கள், இப்பேர்ப்பட்ட சீர்திருத்த வாதிகளா! நம்மதத்தை சீர்திருத்தம் செய்யப் போகிறார்கள்?

கன்னட பாஷையில் ஓர் பழமொழியுண்டு அதாவது "எலி அஷ்டுஹோயிது மனே சுப்ரவாயிது" என்று சொல்வதுண்டு என்ன வென்றால் எலிகளெல்லாம் போய் விட்டன, வீடு பரிசுத்தமாய் விட்டது என்று அர்த்தம். அதாவது ஒரு குருவானவர் தன் வீட்டில் எலிகள் நாலாபக்கங்களில் வளைகள் துளைத்து உபத்ரவம் பண்ணிக் கொண்டிருந்ததை ஸகியாமல் சரியான கொல்லத்துகாரனை வரவழைத்து நன்றாய் அடைத்து எலிகள் தொந்தரவு இல்லாமல் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார். அதற்குள் ஒரு சிஷ்யன், நானே எலிகளின் உபத்ரவமில்லாத படி வீட்டை ஸரிப்படுத்தி விடுகிறேனென்று, குரு வீட்டிலில்லாத ஸமயத்தில் வீட்டில் தீயை வைத்து விட்டான். வீடு சாம்பலாகி விட்டது. எலிகள் எங்கேயோ ஒளிந்து கொண்டன. பிறகு குருவந்து பார்கையில் என்னடா? சிஷ்யா? இப்படிப் பண்ணி விட்டாய் என்று கேட்டார். அதற்கு சிஷ்யன் "எலிகள் எல்லாம் போய் விட்டன வீடு பரிசுத்தமாய் விட்டது" என்றானாம். இது போலத் தான் சில திருத்தவாதிகள் மதத்தை ஒரே வழியாக பாழாக்கி விடப் புறப்பட்டிருப்பது விந்தையிலும் விந்தையே. (தொடரும்)

காளையார்கோவில்

ராதா கல்யாணமஹோத்ஸவம்

காளையார்கோவில் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் ஆகம பாடசாலை வழக்கம் போல் நடந்து வருகிற தனுர்மாஸ பஜனோத்ஸவத்தை இவ்வருஷமும் மார்கழிமீ 1வ முதல் ஷை ஊர் ஆஸ்திகர்களான பக்த மஹாஜனங்களால் பக்தி புரஸ்ஸரமாக பஜனை செய்யப்பட்டது. தினந்தோறும் சிறு குழந்தைகள் எல்லோரும் ஆனந்தத்துடன் ஷை பஜனையுடன் ரத வீதிப் பிரதக்ஷணம் செய்ததும் மிகவும் கொண்டாட தக்கது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரும் நாளும் சுவாமிகள் நிவேதனம் செய்து எதேஷ்டமாய் பிரஸாதமும் அளிக்கப்பட்டது. 24வ திங்கள்கிழமை ஸ்ரீ ராதா கலியாணம் மஹோத்ஸவமும் அதிவிமரிசையுடன் யதோக்தமாய் நன்றாய் நடந்தது. அன்று பிராம்மண சந்தர்ப்பணையும் வெகு குதூகலத்துடன் நன்றாய் நடந்தது 1வ ஆஞ்சநேய உத்ஸவமும் வழக்கம் போல் நடந்தது. ஆஸ்திகர்களான பக்த ஜனங்களுக்கு பக்த வத்ஸலரான பகவான், பரிபூர்ணமாய் ஸர்வா பீஷ்டங்களையும் அளிப்பாராக.

எஸ். பி. வெங்கிடராம கனபாடிகள்.

Printedby S, Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.